பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24. 02 .2025 **MONDAY** 7-15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களின் பயன்கள் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யுமாறு நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களை, பிரதமர் திரு. நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தில்லி சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது..

3. 16வது நிதிக்குழு தலைவர் திரு. அரவிந்த் பனகாரியா, மிஸோரம் மாநிலத்தில் இன்று ஆலோசனை நடத்துகிறார்.

4. பாலஸ்தீனத்தின் மேற்கு கரை பகுதியில் ராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்த உள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

5. புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா - இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>

மத்திய அரசால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் பயன்கள் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யுமாறு நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களை, பிரதமர் திரு. நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

போபாலில் நேற்று அவர் மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த பிஜேபியைச் சேர்ந்த நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து, பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த ஆலோசனை ஆக்கபூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மக்கள் பிரதிநிதிகள் அர்ப்பணிப்பு உணர்வுடன் சேவையாற்றுவது குறித்து விவாதித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, மாநில பிஜேபி தலைமையக வளாகத்தில் உள்ள கட்சியின் முன்னாள் தலைவர் குஷாபாவ் தாக்கரேயின் சிலைக்கு பிரதமர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

<<<<<<>>>>>>

**Surajkund**–ல் நடைபெறும் சர்வதேச கைவினைப் பொருட்கள் கண்காட்சி, ஹரியானா மாநிலத்தின் கலாச்சார அடையாளமாக திகழ்வதாக மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இந்த கண்காட்சியின் நிறைவு விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், கடந்த 2015ஆம் ஆண்டு இந்த கண்காட்சி முதல்முறையாக நடத்தப்பட்ட போது 20 நாடுகள் பங்கேற்ற நிலையில், தற்போது 44 நாடுகள் பங்கேற்றிருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>>

தில்லி சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தொடரின், முதல் நாளான இன்று, புதிய உறுப்பினர்கள் பதவியேற்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, சட்டப்பேரவை தலைவர் தேர்தல் நடைபெறவுள்ளது.

நாளை, துணைநிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா, பேரவையில் உரையாற்றவுள்ளார்.

நாளை மறுநாள் சட்டப்பேரவை துணைத்தலைவர் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் முந்தைய ஆம் ஆத்மி அரசின் செயல்பாடுகள் குறித்த தணிக்கை அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதனிடையே, சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் திருமதி. அதிஷி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி, நான்கு நாள் பயணமாக பிரான்ஸ் சென்றுள்ளார்.

பாரிஸ் நகரில் இன்று அந்நாட்டு ராணுவ தளபதி மற்றும் உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அவர், இந்தியா – பிரான்ஸ் இடையேயான ராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து கலந்து ஆலோசிக்கவுள்ளார்.

நாளை **Marseille** நகருக்கு செல்லும் ஜென்ரல் உபேந்திர துவிவேதி, பிரான்ஸ் ராணுவத்தின் மூன்றாவது படைப்பிரிவை பார்வையிடுவதுடன், இருதரப்பு கூட்டு போர் பயிற்சியையும் பார்வையிடுகிறார்.

**<<<<<<>>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . .

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில், இன்றும் ஏராளமானோர் புனித நீராடி வருகின்றனர்.

நேற்று ஒரே நாளில் ஒரு கோடியே 18 லட்சத்திற்கும் மேற்பட்டோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

உத்ராகண்ட் ஆளுநர் திரு. குர்மித் சிங், ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன்சரண் மாஜி, திரைப்பட தயாரிப்பாளர் திரு. போனி கபூர், பின்னணிப் பாடகர் திரு. கைலாஷ் கெர், காஞ்சி சங்கராச்சாரியார் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், சிருங்கேரி சங்கராச்சாரியார் பாரதி தீர்த்த சுவாமிகள் உள்ளிட்டோரும் நேற்று கும்பமேளாவில் பங்கேற்றனர்.

மேலும், பக்தர்களின் வசதிக்கென, புதுதில்லியிலிருந்து நேற்று ஐந்து முன்பதிவில்லா சிறப்பு ரயில்கள் பிரயாக்ராஜிற்கு இயக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுவரை மொத்தம் 62 கோடிக்கும் அதிகமானோர் கும்பமேளாவில் பங்கேற்றதாக உத்தரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song** - 8 நொடிகள்)*

<<<<<<>>>>>>

விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் 19வது தவணைத் தொகைக்கான நிதி உதவியை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வழங்குகிறார்.

பீகார் மாநிலம், பாஹல்பூரில் நடைபெறும் இதற்கான நிகழ்ச்சியில், பயனாளிகளுடன் பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, அஸ்ஸாம் செல்லும் அவர், குவஹாத்தியில் நடைபெறும் தேயிலைத் தொழில்துறையின் 200வது ஆண்டு விழாவில் பங்கேற்கிறார்.

<<<<<<>>>>>>

16வது நிதிக்குழு தலைவர் திரு. அரவிந்த் பனகாரியா, மிஸோரம் மாநிலத்தில் இன்று ஆலோசனை நடத்துகிறார்.

ஐஸ்வாலில் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தில் தொழில்துறையினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகளிடம் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே வருவாய் பகிர்வு குறித்து கருத்து கேட்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அம்மாநில ஆளுநர் ஜெனரல் வி.கே. சிங்கையும் நிதிக் குழுவினர் சந்திக்கவுள்ளனர்.

<<<<<<>>>>>>

சமூகநீதி குறித்த மண்டல அளவிலான முதலாவது கலந்துரையாடல் நிகழ்ச்சியை மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து இந்த இரண்டு நாள் நிகழ்ச்சிக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

பணியிடங்களில் பாலின சமத்துவம், சமூகநீதிக்கு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவது உள்ளிட்ட அம்சங்கள் குறித்த முக்கிய விவாதங்கள் இதில் இடம்பெறவுள்ளன.

மேலும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் 74வது ஆண்டு விழாவை குறிக்கும் வகையிலும், இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்தியாவில் தொழிலாளர்களின் நலன் மற்றும் அவர்களது சமூக பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசு ஈட்டுறுதி கழகத்தின் பங்களிப்பை எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

காசி தமிழ் சங்கமத்தில் நேற்று நாகாலாந்து ஆளுநர் திரு. இல. கணேசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், வாரணாசிக்கும் - தமிழ்நாட்டிற்கும் இடையிலான ஆன்மிக கலாச்சார ஒற்றுமைகளை எடுத்துரைத்தார்.

வாரணாசி மாவட்ட ஆட்சியர் திரு. எஸ். ராஜலிங்கமும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று மாநாட்டு பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

அங்கீகரிக்கப்படாத மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்து பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய சுகாதாரத்துறை தடை விதித்துள்ளது.

மும்பையைச் சேர்ந்த மருந்து தயாரிப்பு நிறுவனம் ஒன்றில், மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்பு, மாநில மருந்து தரக்கட்டுப்பாட்டு அமைப்புடன் இணைந்து நடத்திய சோதனையில், அங்கீகரிக்கப்படாத மூலப் பொருட்களை கொண்டு இந்த மருந்துகள் தயாரிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, **Ghana** உள்ளிட்ட மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த சுமார் ஒரு கோடிய 30 லட்சம் மாத்திரைகள் மற்றும் மூலப்பொருட்களை அதிகாரிகள் கைப்பற்றினர்.

**<<<<<<>>>>>>**

பாலஸ்தீனத்தின் மேற்கு கரை பகுதியில் ராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவிருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது

இப்பகுதியிலிருந்து வெளியேறிய பாலஸ்தீனர்கள் மீண்டும் அங்கு திரும்புவதை தடுக்க ராணுவ படைப் பிரிவினரையும், பீரங்கிகளையும் இஸ்ரேல் கூடுதலாக அனுப்பியுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. இஸ்ரேல் கட்ஸ் தெரிவித்துள்ளார்.

மேற்குக்கரை பகுதியில் உள்ள அகதிகள் முகாம்களையும், இஸ்ரேல் ராணுவத்தினர் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வருமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், இப்பகுதியில் தீவிரவாத நடவடிக்கைகள் தலைதூக்காத வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் திரு. இஸ்ரேல் கட்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

**<<<<<<>>>>>>**

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

புவனேஷ்வரில் நடைபெறும் இப்போட்டி மாலை மணி 5.15க்கு தொடங்குகிறது.

இன்றிரவு மணி 7.30க்கு நடைபெறவுள்ள இப்போட்டியின் மகளிர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா – இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

**<<<<<<>>>>>>**

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

துபாயில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பாகிஸ்தான் அணி 49 புள்ளி 4 ஓவரில் 241 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

242 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி, 42 புள்ளி 3 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 244 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

விராட் கோலி அபாரமாக விளையாடி சதம் அடித்தார்.

இந்திய அணியின் இந்த வெற்றிக்கு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**<<<<<<>>>>>>**

பெங்களூரு ஓப்பன் டென்னிஸ் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Aryan Shah** வெற்றி பெற்றார்.

**<<<<<<>>>>>>**

உகாண்டாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Sachin - Angad** இணை இன்று உகாண்டாவின் **Joseph - Arafat** இணையை எதிர்கொள்கிறது.

**<<<<<<END>>>>>>**